சி.சி.57/2022.
அ.சா. 1 ஜெயபிரியா
18.08.2025
(எதிரி ஆஜர்)
சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. நானும் எனது கணவரும் தனிக்குடித்தனமாக உள்ளோம் என்றால் சரிதான். எங்களுக்கு மொத்தம் 2 குழந்தைகள் என்றால் சரிதான். புகார் கொடுத்த சமயத்தில் மூத்த குழந்தைக்கு 5 வயது இருக்குமா என்றால் 5 வயது இருக்கும். புகார் கொடுத்த சமயத்தில் எனது மகள் கனிஷ்கா கை குழந்தை என்றால் சரிதான். தற்போது வரை என் குழந்தைகளை நான் தான் பார்த்து பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் வெளியூர் வேலைக்கு சென்று வருவார் என்றால் முதலில் வெளியூர் வேலைக்கு செல்வார் தற்போது வெளியூருக்கு செல்லவில்லை. அசா3 காளிமுத்து மனைவி ராமலட்சுமி எனது அக்கா என்றால் சரிதான்.

2. எனது வீட்டிற்கு பின்புறம் கருப்பையா ஓட்டு வீடு உள்ளது என்றால் எங்கள் வீட்டிற்கு பின்புறம் சைடாக உள்ளது. எனது வீட்டிற்கு பின்புறம் கருப்பு என்பவரின் காரை வீடு உள்ளது என்றால் சரிதான். காளிமுத்து வீட்டின் அருகே தென்வடலாக ரோடு உள்ளது என்றால் சரிதான். கருப்பையா வீட்டிற்கு பின்புறமாக மற்றொரு கருப்பையா வீடு உள்ளது என்றால் சரிதான். கருப்பையா வீட்டிற்கு அருகில் சக்தி என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான். தெய்வேந்திரன் வீடு, சுப்பிரமணி வீடு, அழகர்வீடு உள்ளதா என்றால் அழகர் வீடு அந்த சமயத்தில் இருந்தது. அசா4 கருப்பசாமி, அசா5 மாரிமுத்து ஆகியோர் வீடு எங்கள் வீட்டிற்கு சற்று தள்ளி உள்ளது என்றால் அவர்களை பற்றி தெரியாது.

3. எங்கள் ஊரில் மொத்தம் எவ்வளவு வீடு உள்ளது என்றால் சுமார் 50 வீடுகள் இருக்கும். எங்கள் வீட்டு பகுதியில் எப்போதும் ஆள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. எனது வீட்டை ஒட்டி பாதை உள்ளது என்றால் சரியல்ல. எனது வீட்டை ஒட்டி செல்வதற்கு பாதை உள்ளது என்றாலும் வழக்கிற்காக பாதை இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. கண்ணுற்ற சாட்சிகளாக எனது அம்மா இருளாயி, மாமா காளிமுத்து ஆகியோர்கள் எனது உறவினர் என்பதால் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிற்கும் எனது மாமா காளிமுத்து வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 5 மீ தூரம்

இருக்கும். எங்கள் வீட்டிலிருந்து சத்தம் போட்டால் எனது மாமா காளிமுத்து வீட்டிற்கு கேட்குமா என்றால் கேட்கும். எங்கள் வீட்டில் இருந்து சத்தம் போட்டால் எங்கள் மாமா காளிமுத்து வீட்டிற்கு கேட்காது என்றும் நான் வழக்கிற்காக கேட்கும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் மனுவில் 26.01.2022ம் தேதிக்கு முன்பாக எதிரி தவறான நோக்கத்தில் என்னை சீண்டி வந்தார் என்றும் எந்த தேதியில் எந்த இடத்தில் எத்தனை மணிக்கு என்று குறிப்பிட்டு புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். 26.01.2022ம் தேதிக்கு முன்பாக எதிரி சீண்டி வந்தார் என்று புகார் மனு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. புகார் மனுவில் சேலையை பிடித்து இழுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. புகார் மனுவிலும் போலிசார் விசாரணயிலும் எந்த போன் மூலமாக எந்த போனிற்கு எந்த நாளில், எத்தனை மணியளவில் கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லி உள்ளேனா என்றால் சரியல்ல, அழைபேசி மூலமாக கொலை மிரட்டல் விடுத்ததாக நான் புகார் மனுவிலும் எனது வாக்குமூலத்திலும் தெரிவிக்கவில்லை. பொதுவாக சொல்போனில் புகைப்படம் எடுக்க வேண்டும் என்றால் 2 பேர் இருக்கவேண்டும் என்றால் சரிதான். 26.01.2022ம் தேதிக்கு முன்பு என்னுடன் இருப்பது போல புகைப்படம் நான் குளிப்பது போல வீடியோ பேஸ்புக்கில், வாட்ச்ஆப்பில் போட்டுவிடுவேன் என்று மானத்தை வாங்கிவிடுவேன் என்று அவருடன் வரச் சொல்லி மிரட்டி வருகிறார் என்று எந்த தேதியில், எத்தனை மணிக்கு, எந்த இடத்தில் என்று புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. மேற்படி சம்பவம் சம்பந்தமாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேனா என்றால் 26.01.2022ம் தேதியில் கொடுத்தேன், அதற்கு முன்பு கொடுக்கவில்லை. புகார் மனுவிலும், வாக்குமூலத்திலும் நான் என்ன கலர் சேலை, ஜாக்கெட் அணிந்திருந்தேன் என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் வீட்டில் துணி தைத்து கொண்டிருந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லி உள்ளேன். நான் துணி தைப்பதாக புகார் மனுவில் சொல்லி உள்ளேன் என்றாலும் 26.01.2022ம் தேதி துணி தைப்பதாக புகார் மனுவில் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

5. எங்கள் ஊருக்கும் வீரசோழன் காவல் நிலையத்திற்கும் இடையே 4 கிமீ தூரம் இருப்பதாக குறுக்கு விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். எங்கள்

ஊரிலிருந்து வீரசோழன் காவல் நிலையத்திற்கு நடந்து சென்றால் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1 மணி நேரம் ஆகும். சம்பவ இடத்தில் இருந்து வீரசோழன் காவல் நிலையத்திற்கு இரு சக்கர வாகனத்தில் சென்றால் 1/2 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். புகார் கொடுக்க 4 1/2 மணி நேரம் ஆனது என்பதற்கான காலதாமத்தை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் சம்பவம் அன்று நடந்திருந்தால் நான் காவல் நிலையத்திற்கு 1/2 மணி நேரத்தில் வந்திருக்கலாம் பொய்யாக நாடகம் அரங்கேற்றி எதிரியிடம் இருந்து பணம் பெறும்நோக்கத்தோடு எதிரியின் வீட்டை அபகரிக்கும் நோக்கத்தோடு பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் விருப்பத்தின்பேரில் பழகி வந்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பாக நான் எங்கள் விருப்பத்தின்பேரில் எதிரியுடன் பேசி பழகி வந்ததற்கான செல்போன் பேசிய காரணத்தால் 4 GB memory card, 8 GB pen drive ஆவணமாக எதிரி தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் எதிரியிடம் பேசியதே கிடையாது. வழக்கிற்காக பேசியதே கிடையாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பேசியதை நிரூபிப்பது சம்பந்தமாக மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் குடும்பத்தினருக்கு எதிரி சம்பாதிக்கும் பணத்தை நாங்கள் வந்தோம் என்றாலும் எதிரி எங்களிடம் கொடுத்து வந்தார் என்றாலும் சரியல்ல. எதிரி கொடுத்து வந்த விபரம் எதிரியின் மனைவிக்கு தெரிய வந்த காரணத்தினால் கடந்த 2021ம் வருடம் எதிரிக்கும் அவரது மனைவிக்கும் சண்டை ஏற்படவே அதன் காரணமாக என்னிடம் பேச்சு வார்த்தையை நிறுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. திருப்பதி மனைவி விஜயா என்பவர் என் மீது பணம் வாங்குவது சம்பந்தமாக வீரசோழன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புகார் கொடுக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி புகார் கொடுத்ததின் பேரில் நான் வீரசோழன் காவல் நிலையத்திற்கு சென்று ஆஜர் ஆனேன் என்றால் சரியல்ல. அப்போது சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயபிரியாவின் உறவினர்கள் அழகன், தனிக்கொடி, பூமிநாதன், சோணையா, பாண்டி ஆகியோர் பேசி சமரசம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி 5 நபரையும் விசாரித்தால் உண்மை விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தேதி 25.01.2022ம் தேதி என என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்

25.01.2022 ம் தேதி புகார் மனு ஒன்று கொடுத்தேன் என்றும் அந்த புகார் மனுவை காவல் துறையினர் மறைத்துவிட்டனர் என்று சொன்னாலும் சரியல்ல. பின்னிட்டு வழக்கிற்காக மிகைப்படுத்தி 26.01.2022 ம் தேதியன்று புகார் மனு கொடுத்துள்ளேன் என்றால் 26.01.2022 ம் தேதிதான் புகார் மனு கொடுத்தேன். எதிரி என்னுடன் நண்பர் என்ற முறையில்தான் பழகி வந்தார், நான் எதிரியை திருமணம் செய்ய கட்டாயப்படுத்தியதற்கு அவர் மறுப்பு தெரிவித்தததால் அவர் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்தினர்கள் எதிரியை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் எதிரி மீது பொய் புகார் மனு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரி மீது போடப்பட்ட வழக்கு பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் 26.01.2022 ம் தேதியன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.